(Under Section 173 BNSS) **FIRST INFORMATION REPORT** TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்றவிசாரணை முறை சட்டம் 154 இன் கீழ்)~~ C 8120385

1. District : மாவட்டம் Vellore PS: காவல்நிலையம் Vigilance & Anti Corruption Year: ஆண்டு 2025 FIR No.: முத.அ. எண் 3/2025 Date: நாள் 24.7.2025

2. (i) Act சட்டம்: The prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: U/s 7 of PC

(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: (Amendment) Act 2018

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 21.07.2025 Date to : நாள் வரை 23.07.2025

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் - Time to : நேரம் வரை -

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.07.2025 Time : நேரம் 08.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-II 2025 Time : நேரம் 24.07.2025 @ 08.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக - written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் - O/o the Junior Engineer, TANGEDCO, Virinchipuram, Vellore - 24 Kms.

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. C. Eruseppan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Chellan

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 67/2025 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -

(f) Occupation : தொழில் Retired staff CMC Hospital Vellore (g) Address : முகவரி 1/54A, Thennamara street, Kethuvalai, Virinchipuram, Vellore District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Kirubakaran, Foreman, O/o the Junior Engineer, TANGEDCO, Virinchipuram, Vellore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- no delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Enclosed separate sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Gomplainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/7/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

24.7.2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24.07.2025 @ 13.00 Hrs

Name: பெயர் G.Mythily,
Rank: நிலை .....No. எண் .....
Inspector of police,
VQAC, Vellore.

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u> இன்று 24.07.2025-ஆம் தேதி 08.00 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.C.இருசப்பன் த/பெ.செல்லன், எண்.1/54A, தென்னமர தெரு, செதுவாலை கிராமம் மற்றும் அஞ்சல், அணைக்கட்டு தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு வேலூர் 24.07.2025 அனுப்புநர் C.இருசப்பன் (வயது 67/2025) த/பெ.செல்லன், எண்.1/54A, தென்னமர தெரு, செதுவாலை கிராமம் மற்றும் அஞ்சல், அணைக்கட்டு தாலுக்கா, வேலூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, வேலூர் மாவட்டம். அய்யா, நான் வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுக்கா, செதுவாலை கிராமம், தென்னமர தெருவில் கதவு எண்.1/54A-ல் என் குடும்பத்துடன் வசித்துவருகிறேன். நான் 9-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன், எனக்கு இரண்டு ஆண் மற்றும் ஒரு பெண் பிள்ளைகள் உள்ளனர். மூவருக்கும் திருமணமாகிவிட்டது. நான் வேலூர் சி.எம்.சி மருத்துவமனையில் பஸ் டிரைவராக 39 வருடம் வேலை செய்து ஓய்வு பெற்றுவிட்டேன். செதுவாலை இந்திரா நகர் கண்ணதாசன் தெருவில் எங்களுக்கு சொந்தமாக இரண்டு போர்ஷனில் வீடு உள்ளது. மேற்படி வீட்டில் ஒரு மின் இணைப்பு மட்டுமே உள்ளது. அதனால் இரண்டாவது போர்ஷனுக்கு தனியாக புதிய மின் இணைப்பு வேண்டி கடந்த 23.02.2025 அன்று என் மனைவி திருமதி.செல்வி பெயரில் விண்ணப்பம் செய்தேன். நான் விண்ணப்பம் செய்ததன் பேரில் விரிஞ்சிபுரம் மின்சார அலுவலகத்திலிருந்து அதிகாரிகள் வந்து கள ஆய்வு செய்துவிட்டு என்னிடம் புதிய மின் இணைப்பு கொடுக்கவேண்டும் என்றால் புதிய மின் கம்பம் வைக்கவேண்டும் அதற்காக நீங்கள் கூடுதலாக கட்டணம் செலுத்தவேண்டும் என்று சொன்னார்கள். அதனால் 04.03.2025 அன்று பதிவு கட்டணமாக ரூ.215/- ஆன்லைனில் கட்டி அதற்கான ரசீது பெற்றேன். ஒரு மாதம் கழித்து விரிஞ்சிபுரம் JE அவர்களை பார்த்து புதிய கம்பம் நடுவதற்கு எவ்வளவு கட்டணம் என்று கேட்டதற்கு கம்பம் நடுவதற்கு சேன்ஷன் ஆகிவிட்டது என்றும் ரூ.26,050/- தொகையை 20.05.2025 தேதிக்குள் செலுத்தவேண்டும் என்று சொன்னார். மேற்படி டெபாஷிட் தொகையை கடந்த

07.05.2025 அன்று செலுத்திவிட்டு அதற்கான ரசீது பெற்றுக்கொண்டேன். அதன் பிறகு இரண்டு மூன்று முறை விரிஞ்சிபுரம் மின்சார அலுவலகத்திற்கு சென்று JE அவர்களை சந்தித்து கம்பம் நடுவது குறித்து கேட்டேன். அதன்படி கடந்த வாரத்தில் என்னுடைய வீட்டின் அருகில் கம்பம் புதிதாக இறக்கிவிட்டு கடந்த 19.07.2025 அன்று புதிய மின்கம்பம் நட்டுவிட்டார்கள். மறுநாள் 21.07.2025 அன்று காலை விரிஞ்சிபுரம் மின்சார அலுவலகத்திற்கு சென்று JE அவர்களை சந்தித்து என்னுடைய வீட்டிற்கு புதிய மின்இணைப்பு குறித்து கேட்டதற்கு நீங்கள் போர்மேன் திரு.கிருபாகரன் அவர்களை பாருங்கள் என்று கூறினார். உடனே அலுவலகத்தில் இருந்த போர்மேன் திரு.கிருபாகரன் அவர்களை பார்த்து புதிய மின் இணைப்பு குறித்து விசாரித்த போது உங்கள் வீட்டின் அருகே புதியதாக கம்பம் நட்டதற்கும் பணம் தரவில்லை. அதனால் உங்களுக்கு புதிய மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்றால் எனக்கு ரூ.3000/- பணம் கொடுக்க வேண்டும். அப்போது தான் உங்களுக்கு புதிய மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்வேன் என்று திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். மேலும் அரசுக்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்திவிட்டு வா என்றும் சொன்னார். 23.07.2025 அன்று காலை போர்மேன் திரு.கிருபாகரன் அவர்கள் எனக்கு இரண்டு மூன்று முறை போன் செய்திருந்தார். அப்போது நான் எடுக்கவில்லை. பிறகு மதியம் சுமார் 3.45 மணிக்கு நான் அவருக்கு போன் செய்து பேசினேன். அப்போது அவர் புதிய மின் இணைப்பு பெறுவதற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை செலுத்திவிட்டீர்களா என்று கேட்டார். நான் இன்னும் செலுத்தவில்லை என்று கூறியதற்கு, அரசுக்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்திவிட்டு நாளை காலை என்னை வந்து சந்திக்குமாறும், வரும்போது நான் கேட்ட பணம் ரூ.3,000/- பணத்தை எடுத்து வருமாறு கண்டிப்புடன் கூறினார். பிறகு 23.07.2025 மாலை புதிய மின் இணைப்பு பெறுவதற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய ரூ.5,575/- ஐ ஆன்லைனில் செலுத்திவிட்டு ரசீது பெற்று கொண்டேன். என் வீட்டிற்கு மின் இணைப்பு கொடுக்க லஞ்சமாக பணம் ரூ.3,000/-ஐ போர்மேன் திரு.கிருபாகரன் அவர்களுக்கு கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே மேற்படி

போர்மேன் திரு.கிருபாகரன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் நான் ஆன்லைனில் அப்ளை செய்த விண்ணப்பம் மற்றும் அரசுக்கு பணம் செலுத்திய தொகைக்கான ரசீதுகளின் நகல்கள் ஆகியவற்றை நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்துள்ளேன். ஓம்/-XXXXX 24/7/25

Sir,

Today 24.07.2025 at 08.00 hrs Tr.Erusappan S/o Chellan, No.1/54A, Thennamara Street, Sethuvalai Village and Post, Anaicut Taluk, Vellore District appeared before me at office of the DSP, V&AC Vellore and given a complaint against Tr.Kirubakaran, Foreman, O/o the Junior Engineer, TANGEDCO, Virinchipuram, Vellore District for the allegation of demand of undue advantage as bribe from him. Sd/-xxxxxx 24.7.2025 Inspector of Police, V&AC, Vellore.

Sir,

After verifying the antecedents of accused and credibility of the complainant and with the concurrence of the DVAC, Chennai, registered a case in Vellore V&AC Cr.No.03/2025, U/s.7 of the PC (Amendment) Act, 2018 on 24.07.2025 at 12.00 Hrs. Sd/-xxxxxx 24.7.2025 Inspector of Police, V&AC, Vellore.

Sir,

The original FIR along with the complaint was sent to the Hon'ble Principal District and Sessions Judge, Vellore and sent the copies to the officers concerned.

24.7.2025

(G.MYTHILY)
Inspector of Police,
V&AC, Vellore.